28803
20500

ஸ்ரீ

# திருவேங்கடசதகம்

(அரும்பதவுரையுடன்)

வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால்

வேலூர்

வாணீ நிகேதன அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

1912

[All rights reserved]

[விலை அணா இரண்டு]

# A FEW OPINIONS

## Prahladalvan Charithai

"Prahlada Charitram is well-written. I am sure it will become popular among High School and College students."–T. CHELVAKESAVARAYA MUDALIAR ESQR., M.A., PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

---

"வேலூர்க்காலெஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர், தமிழில் வசனநடையாக இயற்றிய பிரகலாதாழ்வான் சரிதையென்னும் புஸ்தகம், தெளிந்த இனிய நடையில் எழுதப்பெற்றிருத்தலின், மிக்க இன்பத்தை விளைவிக்கின்றது. இதனுள் அங்கங்கே எடுத்துக்காட்டப்பெற்றிருக்கும் சிறந்த பாடல்களும படிப்போருடைய மனத்தைக் கவர்ந்து இன்புறுத்துமென்று எண்ணுகிறேன். இதனை இயற்றியவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நல்ல பயிற்சியுள்ளவரென்பது இதைப் படிக்கும்போது புலனாகின்றது. வசன நூல்களைப் படிக்க விரும்புவோர் இதனைவாங்கிப் படிப்பார்களாயின், இந்தநூலாசிரியரால், இதுபோன்ற இன்னும் சிலநூல்களைத் தமிழ்நாடு பெற்று மகிழ்வடையுமென்று நினைக்கிறேன்."—**மஹாமஹோபாத்தியாய பிரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், பிரஸிடென்ஸி காலெஜ், சென்னை.**

---

"தங்கள் பிரகலாதாழ்வான் சரிதையும் மார்க்கண்டேயசரிதமும் வாசித்துப்பார்த்தேன். அவ்விரண்டையும் செவ்வையாய் வாசிப்பவர்களுக்குப் பிழையின்றி வசனிப்பதற்கும் எழுதுவதற்கும் தக்கதிறமையுண்டாகுமென்று திடமாய்க்கூறுவேன்."—**ம. ரா. ரா. ஸ்ரீ. ஆ. கமலநாதமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர், முனிஸிபல் ஹைஸ்கூல், வாலாஜாநகர்.**

---

"பண்டிதர் பாமரர் எல்லாருக்கும் ரஸம்தருவதான இக்கதையை, நமது நண்பர் வேலூர் காலெஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் வசனநடையில் எழுதி வெளியிட்டது, அனைவருக்கும் மகிழ்ச்சியைக் காக்கக்கே."—**இந்துநேசன்.**

# திருவேங்கடசதகம்

(சிறுவர்க்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட்டிரட்டு)

[அரும்பதவுரையுடன்]

வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால்

வேலூர்

வாணீ நிகேதன அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

[காபிரைட் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது]

1912

(விலை அணா இரண்டு)

ஸ்ரீ

# முகவுரை

அரிய பெரிய நீதிகளையும் மற்றுஞ்சில விஷயங்களையும் சிறுவர்க்கு ஏற்ற எளிய நல்ல செய்யுள்நடையில் தெரிவிக்கும் சிறந்த நூலாகிய இத்திருவேங்கட சதகம், பல சிறுபள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டு வருதல் யாவரும் அறிந்ததே. இந்நூல் கற்பிக்கப்படுதல் மிகவும் நன்றே. ஆயின், இச்சிறந்த நீதிநூல் கற்பிக்கப்படும் முறையோ குறையுற்றிருக்கின்றது: அஃதாவது—இந்நூலுக்குத் தக்க உரையின்மையாலோ பிறகாரணங்களாலோ மாணுக்கர்கள் பொருளறியாமற் செய்யுள்களைப் பாடம் பண்ணும்படி கற்பிக்கப்படுதலேயாம்.

இக்குறையோடு, பிழையில்லாத நல்ல சுத்தப்பதிப்புப்புஸ்தகம் தக்கஉரையுடன் கூடியது கிடைக்காமல், அச்சுக்கு ஏற்காத விகாரமான காகிதமும் பிழைகள்மலிந்த விரும்புதற்காகாத அச்சும் சிறவாத உரையும் உள்ள புஸ்தகம் கிடைந்தால் ஆகுங் குற்றங் குறையுஞ் சேர, இந்நூற்படிப்பு எவ்வளவு தாழ்ந்தநிலையில் இருக்குமென்பது யாவரும் அறியக்கூடியதே.

இங்ஙனம் இந்நூற்கல்வி மிகவும் சீர்கேடு அடைந்துள்ள நிலையில், அறிஞர் சிலர், இவற்றையெல்லாம் ஆலோசித்து, குற்றங் குறைகள் அகன்றால் இந்நூற்கல்வி சிறக்குமெனை அறிந்து, நீதிநூற்படிப்பு முக்கியமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டுமென்றும், மற்றும், பெற்றோர்கள் தம்மக்கள் இந்நூலையும் வேறு சில நூல்களையும் படிக்கவேண்டுமென்று விரும்புதலின் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுதற்காகவும் இந்நூல் பாடபுத்தகமாக வேண்டுமென்றுங் கருதி, என்னை அபிமானித்து இந்நூலையும் மற்றுஞ்சில நூல்களையும் தக்க அரும்பதவுரையோடு நல்ல சுத்தப்பதிப்பாக வெளியிட்டுத்தருதல் நலமெனை அன்புடன் உரைத்தமையின், இந்நூலை அவர்கள்கருத்திற்கேற்ப வெளியிடலானேன்.

சிறுவர் கற்றற்கு ஏற்காத சிருங்காரரஸ விஷயங்களும் மற்றுஞ்சில இடக்கர்களும் அடங்கிய செய்யுள்கள் இப்புத்தகத்திற் சேர்க்கப்படவில்லை.

செய்யுள்களுக்குப் பதவுரை கருத்துரை முதலியனவெல்லாம் விவரமாகச் சேர்த்தால் அதனால் படிப்பவர்க்கு நூல் மிக எளிதாயிருக்குமாயினும், அங்ஙனஞ்செய்தலில் கற்பவர்கள் யாதொரு தன்முயற்சியுமின்றி வெறுங் குருட்டுப்பாடமாக நெட்டுருச்செய்து அதனால் அறிவு நிரம்பப்பெறாரென்று அறிஞர் பலர் கருதுகின்றனராதலின், இன்றியமையாததும் சுருக்கமும் கூடியவரையில் தெளிவுமான அரும்பதவுரைமாத்திரம் எழுதிச் சேர்த்திடலானேன். கடினமான சிற்சிலஇடங்களிற் கருத்துரையும், சிற்சில இடங்களில் மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலிலுள்ள செய்யுட்கருத்துக்கள் மிகச்சிறந்தனவாதலின், பெரிய கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கர்களும் பிறருங்கூட இந்நூலைப் படித்தறிதல் தகும்.

கல்வித்துறையிலுள்ள அதிகாரிகளும், சிறு பள்ளிக்கூடங்களிலும் பெரிய கலாசாலைகளிலுமுள்ள உபாத்தியாயர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் இப்புத்தகத்தை அபிமானித்து, எனக்கு ஊக்கந் தரும் உதவிபுரிவார்களென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூற்பதிப்பு இன்னுஞ் சீர்திருந்துதற்காக உபாத்தியாயர்களும் மற்றும் அறிஞர்களும் தகுதியாக வெளியிடும் அபிப்பிராயங்களெல்லாம் வந்தனத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அடுத்தபதிப்பில் அத்தகைய சீர்திருத்தம் செய்யலாகும்.

வேலூர்
1912௵ எப்ரில்௴ 20௳ } பு. க. ஸ்ரீ.

ஸ்ரீ

# திருவேங்கடசதகம்

---

சிறந்த வேங்கடமென்னும் திருப்பதியின்பெயரைச் செய்யுள்தோறும் அமைத்துப் பாடப்பெற்ற நூறுசெய்யுள் கொண்ட ஒரு பிரபந்தம். இப்புத்தகத்தின் செய்யுள் ஒவ்வொன்றிலும் ஈற்றில் '**வேங்கடராயனே**' எனத் திருவேங்கடமுடையானது திருநாமம் வருமாறு காண்க. வேங்கடமென்பது - ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம்: இது, **திருப்பதி திருமலை**யெனவும் வழங்கப்படும். இந்நூலுக்கு '**மணவாளநாராயண சதகம்**' என்னும் மறுபெயருண்டு. அதற்குக் காரணம் - இந்நூல் 'மணவாளநாராயணன்' என்பதுமுதலிய சில சொற்றொடர்களை ஒவ்வொருபாட்டிலும் மகுடமாகக் கொண்டுள்ளமையும், மணவாளநாராயணன் என்ற பிரபுவின் விருப்பத்தின்படி பாடப்பட்டதாதலும் என அறிக.

## நூலாசிரியர்

இது, ஓமலூர் வேங்கைடப்பூபன் என்பவனது மகனாய்க் **களழிரில்** வாழ்ந்த **மணவாளநாராயணன்** என்ற பிரபுவேண்டுகோளின்படி, **வெண்மணி**யென்ற ஊரில் வாழ்ந்த முத்தரையரது குமாரரான **நாராயணபாரதி**யென்பவர் நூறுபாடல்களாற் பாடியதொரு நீதிநூலாகும். இந்நூலாசிரியர் ஸ்மார்த்தப் பிராமணர். இவர்மதம் வைஷ்ணவம். இவராற் பாடப்பட்ட பிரபுவும் வைஷ்ணவசமயத்தவனே யென்பது, இந்நூற் செய்யுள்தோறும் 'மணவாளநாராயணன் மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே' என்று திருமாலை விசேடித்துக்கூறியதனால் விளங்கும்.

ஸ்ரீ

மணவாள நாராயணசதகம் என்கிற

# திருவேங்கடசதகம்

(அரும்பதவுரையுடன்)

---

காப்பு

செந்திருவாழ் மார்பன் திருவேங்கட சதகம்
பைந்தமிழா னீதிநெறி யான்பா டவே—வந்தருளுங்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தாமரை யணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

காப்பு—காக்கின்ற கடவுள்விஷயமான வணக்கம். கவி தமக்கு நேரிடத்தக்க விக்கினங்களை நீக்கித் தமதெண்ணத்தை முடிக்கவல்ல மேலார்பொருளின் விஷயமாகச் செய்யுந் தோத்திரமென்பது, கருத்து. இக்காப்பு, திருமாலைப்பற்றியது.

செம் திரு=செந்நிறமுள்ள அல்லது அழகிய இலக்குமி. செந் திருவாழ் மார்பன் திருவேங்கட சதகம்=திருமாலின் சம்பந்தமான திருவேங்கட சதகம். பைந்தமிழ்–பசுமை+தமிழ்: குளிர்ந்த [இனிமையான] தமிழ்ப்பாஷை. நீதிநெறி–நியாயவழி. கார் முகம் அஞ்சு அங்கத்தான் காளமேகமும் (ஒப்பாகமாட்டாமல்) முன்நிற்பதற்கு அஞ்சும்படியான [வெட்கும்படியான] [மிகவுங்கரிய] திருமேனியையுடையவன். கை தாமரை அணிந்த தாமரைமலர்போன்ற தனது திருக்கைகளில் தரித்த. கார்முகம் அம் சங்கத்தான்–வில்லையும் அழகிய சங்கத்தையும் உடையவனை திருமால். திருமாலின் சம்பந்தமான சதகத்தை நீதிநெறியுடன் யான் பாடத் திருமால் காப்பாக வந்தருளுவான் என்பது இச்செய்யுளின் கருத்து.

# நூல்

## கடவுள் வாழ்த்து

பூமேவு திசைமுகனை யுந்திதனி லீன்றதும்
புனித வேதாகமமெலாம்
புருஷோத்தமன் றெய்வமென்பதும் பூசுரர்கள்
புரியு மந்திர கருமமும்

தேமேவு மலர்மங்கை மார்பில்வாழ் சீருஞ்
செகத்தினைக் காத்தருள்வதுந்
தேவர்முதன் மருகளுந்து பட்சிசிலை மரமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்

பாமேவு பொருளலங்காரஞ் சிறப்பதும்
பலவிதமு நீயென்பதாற்
பரதெய்வ முண்டென் றிருப்பார்க ளென்றால்
பழித்தலிக்கோ தெரிகிலேன்

மாமேவு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

பூ மேவு திசைமுகன்=தாமரைமலரிற்பொருந்தியவனும் நான்கு திசைகளையும் நோக்கிய நான்குமுகங்களையுடையவனுமாகிய பிரமன். உந்தி=நாபி. ஈன்றது=பெற்றது. புனிதம்=பரிசுத்தம். பூசுரர்கள்=அந்தணர்கள். தேன் மேவு மலர் மங்கை=தேன்பொருந்திய தாமரை மலரில் வாழும் இலக்குமி. சீர்=சிறப்பு. சிலை=கல். பதம்=பரமபதம்: மோக்ஷம். பா மேவு பொருள் அலங்காரம்=செய்யுளிற்பொருந்தும் பொருளணி. பரதெய்வம்=மேலான வேறு கடவுள். மா மேவு=இலக்குமிபொருந்திய. மனதில் உறை=மனத்தில் வசிக்கின்ற. அலர்மேலு மங்கை=அலர்மேல் மங்கை; தாமரைமலரின்மேலுள்ள திருமகளின், மணவாளனே=கணவனே நாராயணனே! வரத=அடியார்களுக்கு வரமளிப்பவனே! வேங்கடராயனே=திருவேங்கடமலைக்குத் தலைவனே! [திருவேங்கடமுடையானே! என்றபடி.] (1)

## அந்தணர் சிறப்பு

சீலமிகு மாகம புராண மனுநீதியுந்
தேர்ந்து மெய்ஞ்ஞான நிறைவார்
செய்கின்ற யாகாதி மந்த்ர கருமங்களாற்
றேவர்க்கு முதவிசெய்வார்
காலமுதலாகிய ப்ரமாணங்க ளங்கையிற்
கனிபோலவே காட்டுவார்
காயத்ரி மகிமையாற் சகலதீவினைகளுங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசை திங்கண் மும்மாரியுங் கொற்றவர்
நடாத்து செங்கோல்வளமையு
நாடுகள் செழிப்பதுஞ் சகலகருமமும் வேத
நாயகர் மகத்துவங்காண்
வாலகருடன் பண்டு கண்டகதை யல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

சீலம்=நல்லொழுக்கம். மெய்ஞ்ஞானம்=தத்துவஞானம். அங்கையில் கனி = உள்ளங்கை நெல்லிக்கனி. காயத்ரி = ஒருமந்திரம். ஞாலமிசை = பூமியில். திங்கள் = மாதம். மும்மாரி = மூன்றுமழை. கொற்றவர் = வெற்றியுடைய அரசர். செங்கோல் வளமை = நேர்மையான அரசாட்சிச்சிறப்பு. வேதம் நாயகர் = வேதங்களை ஓதவும் ஓதுவிக்கவும் உரியவர்களான அந்தணர். வாலகருடன் பண்டு கண்டகதை கேட்டறிக. விரிப்பின் பெருகும். (2)

## அரசர் சிறப்பு

சீருலவு மனுநீதி மந்திரிசொ றன்புத்தி
தேசக்தியற்கை நான்குந்
தேர்ந்து செவிவிழிமனது மூன்றினும் பொறுமையே
சேர்ந்து செங்கோல் செலுத்தித்

தாருலவு கமலமுங் குமுதமுங் காலங்கள்
தேர்ந்து மலர்கின்ற விதம்போல
தந்திபொரு முதலைபொரு தானபலமுங் கண்டு
தரியலரை வெற்றிகொண்டு

பாருலவு கொடிசேனை தனதானியஞ் சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பரிபால னங்களொடு கீர்த்தி ப்ரதாபம்
படைக்க திறலோ னரசனாம்

வாருலவு தனமங்கை மனமகிழு நாதனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனே.

சீர் உலவு மனு நீதி=சிறப்புப்பொருந்திய மநுதர்மசாஸ்திரத்திற் கூறப்பட்ட நியாயம். தேர்ந்து-ஆராய்ந்தறிந்து. தார் உலவு கமலம்=மாலையிற்பொருந்தும் தாமரைமலர. குமுதம்-ஆம்பல். தந்தி=யானை. பொரு-போர்செய்யும். தானபலம்=ஸ்தாநபலம. தரியலர்=பகைவர். பார்-பூமி. திறலோன்=வலிமையுடையவன். வாருலவு தனம் மங்கை=மிக்க செல்வத்திற்கு உரிய தெய்வமாகிய இலக்குமி (3)

## வணிகர் சிறப்பு

திடமுடன் றம்மன தறிந்து வாணிபமே
செய்வ ராதாயமீந்திச்
செலவுசெய்வார் யாவர் வருகினுங் கண்டபடி
தேர்ந்து நிறைபோ லுரைப்பார்

அடகு தந்தாலு மரியாதையில்லாருக்
கரைக்காசு கடனு முதவார்
மானமனு நீதியுடையோர் கணக்கை வாய்மையா
லளவிலாப் பொருள்கொடுப்பார்

கடுகுதனி லெட்டிலொரு கூறுவர வெனினுங்
    கணக்குமுறை தன்னில்வழுவார்
  காரியவிசேஷமதி லொருகோடி யுதவுவார்
    கருணைவர்த்தகர்பெருமைகாண்
வடமலை தினம்பரவு தென்மலைக் கதிபனை
    மணவாள நாராயணன்
  மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
    வரத வேங்கடராயனே.

வாணிபம் = வர்த்தகம். ஆதாயம் = வரவு. கண்டபடி தேர்ந்து = விலையை ஆராய்ந்தறிந்து. நிறைபோல் உரைப்பார் = தராசுகோல் போல் சரியாக [நேர்மையாக] விலைகுறித்துச் சொல்வார்கள். மனுநீதி உடையோர் = நீதிமான்கள். உரை வாய்மையால் = சொல்லும் உறுதிமொழியாலேயே : பிராமாணிகப்பேச்சினாலேயே. வடமலை = திருவேங்கடமலை. தினம் பரவு = நாடோறும் (அடியவர்கள்) துதிக்கப் பெற்ற. தென்மலை = அழகர்கோயில் என்னும் திருமாலிருஞ்சோலைமலை : இது, தென்மதுரைக்கு அருகிலுள்ள ஒரு திவ்யஸ்தலம். (4)

## புருஷராய்ப் பிறந்தோர் பெறுபயன்

புருஷராய்ச் சநநமெடுத்தபேர் மெய்ஞ்ஞான
    போதத்தை யறிவதொன்று
  பூமியொடு மிக்கதனவா னவதொன்றலது
    பூவலஞ் செய்வதொன்று
தருமவா னென்று மிகுகீர்த்திமா னென்றுநற்
    சற்குண விவேகியொன்று
  சகலரும் புகழ்கின்ற வித்துவா னென்றரண
    சங்க்ராம வீரனென்று
கருணைசே ரிந்தவகை யில்லாத மனிதரைக்
    காசினியி லேன்படைத்தாய்
  கருதுதா யுதரமும் பார்க்கின்ற பேர்களிரு
    கண்களுஞ் செய்தவினையோ

மருவுலாவிய துளப மாலையணி மார்பனை
மணிவாள சாபாயுதனை
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனை.

சனனம் பிறப்பு. போதம்-உணர்ச்சி. பூவலம் செய்வது-பூமிப் பிரதக்ஷிணஞ் செய்வது. ரணசங்க்ராமம் – யுத்தகளத்திற் செய்யும் போர். காசினி பூமி. உதரம்-வயிறு. மரு உலாவிய துளபம் வாசனை வீசப்பெற்ற திருத்துழாய். (5)

## அரசர்க்குரிய தொழிலாளரியல்பு

காரியா காரியந் தொகுத்து தெரிந்திடக்
கண்டுசொல்லுவோன் மந்திரி
காலமுங் களமுந் தெரிந்தரி யிகல்வென்றிடக்
கருதுவோன் தளகர்த்தனாம்
சீரியதனங்கள்வாரி யச்சிபமறக் காமுந்
திடப் பிரியோவான் பண்டாரி
செப்பவாசகதாட்டி யவதான வக்கணை
சிறக்குமவனே ராயசன்
சூரியன் திசைமாறினுந் தான்மாறிடாக் கணக்
தொகைவிடான் கருணிகனாம்
சொல்வன்மை நடைவன்மை பாராய் வன்மைதெரி
சுமுகனே தானாபதி
மாரியது காத்தருளு மணிமேக வண்ணனை
மணிவாள நாராயணனை
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனை.

காரிய + அகாரியம்-காரியாகாரியம். காரியம்-செய்யத்தக்கது. அகாரியம - செய்யத்தகாதது. இகல் – பகை, போர். தளகர்த்தன் = சேனாதிபதி. சீரிய = சிறப்புள்ள. வாசகதாட்டி – பேசுந்திறம். அவதானம் – கூர்ந்த நினைவு. வக்கணை நாகரிகம், பட்டப்பேர், விற்பன்னம். ராயசன்=சம்பிரதி. கருணிகன்=கணக்கன். வண்மை—வளம்.

பாராசர் = வேற்றரசர். சுமுகன் = நன்முகமுள்ளவன். தானாபதி = தூதன். மாரி=மழை. மணி மேகம் வண்ணன்=நீலமணியும் நீலமேகமும்போன்ற நிறமுடைய திருமால். (6)

### இதனா லிஃதுளதா மெனல்

அதிகார மதுவந்து சேரி லெவருக்குமே
யதிகவல்லமைக ளுண்டா
மாடையாபரணங்கள் சேரி லெவருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவு செல்வமது சேரி லெவருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாம்
நெஞ்சமகிழ் விதரணஞ் சேரி லெவருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவு பத்தியது சேரி லெவருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்க பருவமது சேரி லெவருக்குமே
தூயமண வாசையுண்டாம்
மதிசேரி லங்குமுத மலரா திருக்குமோ
மணவாள நாராயணன்
மணநிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

வளமை=சிறப்பு. நிதி மேவு செல்வம் = நிதிபோற் பொருந்திய மிக்க ஐசுவரியம். விதரணம்=ஈகை. தூய=பரிசுத்தமான. மதி=சந்திரன். அம் குமுதம்=அழகிய ஆம்பல். (7)

### பித்ருவாக்கிய பரிபாலன முதலியவற்றல் வருநன்மை

தந்தைதாய் வாக்யபரிபாலனம் புரிவதுந்
தான்சொன்னபடி செய்வதுந்
தவறாத விரதமும் பொய்யாத வசனமுந்
தானமுங் கனபொறுமையும்

சிந்தைமகிழ் மாயினோர் செய்தொழின் முடிப்பதுந்
தேவதா விசுவாசமுஞ்
செய்தபேர் பரசுராமன் கவச குண்டலன்
செயராமனொடு வீடுமன்
அந்தமிகு சொல்லரிச்சந்திரன் மாபலி
யடலருமனொடு பகீரத
னருள்பிரகலாதனிவர்போற் பெருங்கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமரர் போற்றவளர் சேஷகிரி வாசனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனே.

கன பொறுமை=மிக்க சாந்தகுணம். சிந்தை மகிழ் மாயினோர் = மனம்மகிழத்தக்க தன்வமிசத்தைச் சேர்ந்தவர். தந்தைசொல் பரிபாலித்தவன் = பரசுராமன். தாய்சொல் பரிபாலித்தவன் = கவசகுண்டலங்களோடு பிறந்த கர்ணன். தான்சொன்னபடி செய்தவன் = தசரதராமன். தவறாத விரதமுடையவன் = வீடுமன். பொய்யாத வசனமுடையவன் = அரிச்சந்திரன். தானமுடையவன் = மஹாபலிசக்கரவர்த்தி. கனபொறுமையுடையவன் = தருமபுத்திரன். சிந்தைமகிழ் மாயினோர் செய்தொழில் முடித்தவன் = பகீரதன். தேவதாவிசுவாசமுடையவன்=பிரகலாதன். இவர்களைக்குறித்துக் கேட்டறிக; விவரித்தால் பெருகும். அந்தம்=அழகு. அடல்=வலிமை. அவனிமிசை=பூமியில். (8)

## சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்

தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
சன்னச்சம்பா வாகுமோ
சந்ததமும் வாடா திருந்தாலு மெட்டிமலர்
சாதிமல்லிகையாகுமோ

கடலெலா நிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற
காவிரியி னூற்றாகுமோ
காகங்கள் கோடிதொனிசெய் தாலுமொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ முந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்ற சாதியுங் கனவபது மென்மையும்
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிக மன்று குணமேபதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

தட வரை=உயர்ந்த மலை. சந்ததமும் = எப்பொழுதும். சுவை= உருசி. பகர்கின்ற சாதி=(சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற சாதி. (9)

## செல்வத்தால் வருமுயர்வு

செல்வமது சேரிலோ வெங்குபேர் வெங்கனுந்
திரளாகில் வேங்கடனுமாந்
செயல்கொண்ட வேங்கடாசலனுமா மையராந்
திரளைய ரவர்களாகும்
நல்லிசைகொடுதானடக் திடுங் காரிய
நயந்தரு தாகுமப்பா
னல்லோலை கிள்ளாக்கொ டொப்பமே லொருவசன
நவிலுமுன் கப்பமிடுவார்
சொல்வண்மை வாவென்றபோர் வாரு மென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்ற தேவரீ ரவர்களாங் காணுமுன்
றொழுதெழுந் தருளுமென்பார்

வல்லிதப்பெறுபரம லோபியர்கண் மிண்டனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

வேங்குபேர்=(ஒருவனுக்குச்செல்வமில்லாதபோதிருந்த) வேங்கு என்னும் பெயர். செயல் கொண்ட = நல்லொழுக்கமுடைய. திரளையர் = பெருமைமிகுதியையுடைய ஐயர். நயந்த - விரும்பிச்செல்லும். கிள்ளாக்கு = உண்டியற்சீட்டு ; உண்டிப்பத்திரம். ஒப்பம் = அதிகார பத்திரிகை. மிண்டன் = வலியவன். (10)

## வறுமையால் வருமிழிவு

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல்வ டந்தைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடு மனமெலிய மேனிவெற் றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்விபோ
முதாத்தி லதிகபயமா
முறையின்முறை யாருமொருவார்த்தைசொல்லார்சொன்ன
வுத்தரமு மொருவர்கேளார்
விதிக்கின்ற வகைக்கெல்லாரு மிகழுவார்
மிடிவந்து சேர்ந்ததென்றால்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
வித்தையே தெவரறிவார்காண்
மதிக்கின்ற வன்பதம் போற்றி லவைசேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

சோகம் உற = மனவருத்தமுண்டாம்படி. வசை = நிந்தைமொழி. உதிக்கின்ற - (மனத்தில்) உண்டாகின்ற. உத்தரம் - வார்த்தை.

விதிக்கின்ற உலகம் = (கடவுளாற்) படைக்கப்பட்ட உலகம். மிடி = தரித்திரம். நலம் = நன்மை. மதிக்கின்ற உன் பதம் = (ஞானிகள் யாவராலும்) கொண்டாடப்படுகின்ற உனது திருவடிகள். அவை = அத்தரித்திரத்துன்பங்கள். (11)

### பொறுத்துக் கண்டிக்கப்படுபவர்கள்

கண்டிருபந்தனைத் தள்ளுவோர் குருசாமி
காரியக்குறைசெய்குவோர்
காணு விடத்திற் பழித்துரைப்போர் வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்

சண்டைகொடு தந்தைதாய் சுற்றமுடனனுதினந்
தளராது கலகமிடுவோர்
தம்முடைய வலிமையால் மெலியோர் பொருளினைத்
தள்ளிய மதங்களுடையோர்

அண்டிவரு தஞ்சரொடு கேடு வினைசெய்குவோ
ராகுமிவ ரெண்மர் தமையு
மாறுபோன் மூன்றாம்பிறை கண்டபின் கண்டிப்ப
தாசாரமனுநீதிகண்டாய்

வண்டுலவுகின்றமலர்த் தண்டுளப மார்பனை
மணவாள நாராயணன்
மணதிலுறை பலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

திருபந்தனை தள்ளுவோர் = கடிதத்தையும் கட்டளையையும் அலக்ஷியஞ்செய்பவர். குருகாரியம் சுவாமிகாரியம்என்று சேர்த்துக்கொள்க. அனுதினம் = நாடோறும். எண்மர் = எட்டுப்பேர். ஆறுபோல் = ஆறு முதலியவற்றின் நீர்போல். வண்டு உலவு = வண்டுகள் மொய்க்கப் பெற்ற. தண் துளபம் = குளிர்ந்த திருத்துழாய்மாலை. (12)

## இது இச்சிறப்புடையினும் பயனில்லையெனல்

காட்டில்விண்டுஞ்செடி தழைத்திடினென்ன காஞ்சிரங்
கனிபழுத்துச் சிவக்கிலென்ன
கானான வெல்லை பலர்க்கிதென்ன காகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன

ஆட்டின்கழுத்திலதர் நீண்டென்ன நீர்ப்பாசி
யடர்பச்சை பாசிலென்ன
வற்பாறைக் கதிகாரம் வந்திதென்ன பேழ்கையரி
லாயுதம் பெருந்திலென்ன

நீட்டமொடு கராடிக்கு பயிர்வளர்ந்தாலென்ன
நீதியறியாதவர்மடர்
நிறைசெல்வமாமென்ன ஞானமில்லாக்கல்வி
நிலைபோ விருக்குமென்பார்

வாட்டடங்கண்ணிபுனை கண்ணிமகிழ் கண்ணனை
மணவாள நாராயணன்
மனதிலுறை பலர்மேலுமங்கை மணவாளனே
வடவேங்கடராயனே.

காஞ்சிரம் கனி = எட்டிப்பழம். ஆட்டின் கழுத்தில் அதர் = ஆடுகளின் கழுத்தில் தொங்குகிற பயனற்ற தோல்முலை. 'வாட்டங்கண்ணி' என்பதை = வாள் தட கண்ணி என்று பிரிக்க: வாளாயுதம்போன்ற கூர்மையுள்ள பெரிய கண்களையுடையவளான ஆண்டாள் என்ற தேவி. புனை கண்ணி = சூடிய மாலை. திருமால் ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டவாலாறு அறிக.

## கலியுக தோஷம்

அற்புவியின் மிக்கவொப்பந் ஞானியைக் கண்டாலு
மதுவொரு வேஷமென்பா
ராகம புராண மதநூல் விதம்பார்க்கம்பரி
யாசகதைபேசுவார்

கம்பமிசை பொருகோடு கானமிட்டாலுமது
கண்கட்டு வித்தையென்பார்
கற்பனை யலங்கார மாக்கவிகள் பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்
நம்பிவிசுவாசமொடு துதிசெய்யினுங் கள்ள
ஞானமென்பார்க ளவைமேல்
வைபந் தகவிபுதாமகிமை நின்னையுஞ் சிலபேர்
நவின்றுகுறைசொல்வர் கண்டாய்
வம்பவிழ் மலர்ச்சோலை மலையலங்கார னை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனை
வரத வேங்கடராயனே.

அம் புவி=அழகிய பூமி. நவின்று குறை சொல்வர்=குறைமிகுதி யாகச்சொல்வர். வம்பு அவிழ்=வாசனை வீசப்பெற்ற. அலங்காரன்=அழகன்: இவை, திருமாலிருஞ்சோலைமலைத் திருமாலின் திரு நாமங்கள். (14)

## கவிவாணரருமை யறிவாரில்லாமை

கற்பனை யலங்கார மாக்கோவை பாடினுங்
கனவரிசை பொருபச்சடங்
கலம்பகங் கூறிலொரு துப்பட்டி பின்னைக்
கவிக்கென்னி லொருசோமனே
நற்பொரு ளுலாவென்னி லூறுபாலை மடலுக்கு
நாலைந்தா பொருபணம்
நல்வண்ண மென்னிலொரு சாப்பாடு மாலையெனி
னன்னைதரு தாம்பூலமாம்
அற்புதம் பெறுகவிக ளென்னிற் பளாபளா
வதிகவெகுமானமாகு
மப்படியு மாயிரத் தொருவரொன்றுமிலங்க
வருமையெவ ரறிவர்கண்டாய்

மற்பொருத மல்லரொடு முற்பொருத வீரனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனே.

கோவை, கலம்பகம், பிள்ளைக்கவி, உலா, மடல், மாலை = இவை தமிழில் உள்ள பிரபந்தவகைகள். பச்சடம் = பச்சைவடம்; இது, ஒருவகைச்சீலை. உறுமாலை=சின்னவஸ்திரம். பளாபளா=பளா பளா என்று வியந்துகூறும் சொல். மல் பொருத=மற்போர்செய்த. முன் பொருத-முன்னே [கிருஷ்ணவதாரத்தில்] யுத்தஞ்செய்து அழித்த.

## இவர்க்குப் புண்ணிய மிதுவெனல்

உன்னுடைய பதசேவை தன்றி பணிகின்றதே
யுடல்செய்த புண்ணியமது
முறைகொண்ட கீதையின் சாரங்கள் கேட்பதே
யுற்றசெவியின் புண்ணியம்
தன்னுடைய புத்திர ரனைக்கசோ தும்பதே
சாற்றுநாவின் புண்ணியந்
தத்துவ முணர்ந்தபெரியோர்தமைக் காண்பதே
சார்ந்தவிழியின் புண்ணியம்
பண்ணுமிரவலர் கேட்குமுன்னங் கொடுப்பதே
பாணியதுசெய் புண்ணியம்
பதிவிரத மங்கை துணைமிக்கபுருடற்குப்
பலிப்பதே பெருபுண்ணியம்
மன்னுமிவை முன்செய்த புண்ணியம தென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

கீதை=பகவத்கீதை; இது, கண்ணபிரானால் அருச்சுனனுக்குச் சொல்லப்பட்டது. உற்ற = பொருந்திய. தத்துவம் = உண்மைப் பொருள்கள். சார்ந்த=பொருந்திய. பண்ணும் இரவலர்=(தமது குறைகளைச்)சொல்லுந்தன்மையுடையவர்களானயாசகர். பாணி=கை. (16)

### இவர்க்குப் பாவமிதுவெனல்

திருந்துகற்பனையிலாப் புன்கவிகள் கேட்பதே
செவிசெய்த பாவமாகும்
செயலருமை யறியாதவர்கண்முன் சேவகந்
திரிதல் கால்செய்த பாவம்
பரிந்தவுபசாரமா தரவிலார்மனையினிற்
பருகலுணவின் பாவமாம்
பாவனை லயஞ்சுருதி நயமிலாப் பரதமது
பார்த்தல் விழிசெய்த பாவம்
தருந்தமிழை யறியாதவர்களிடமேற்கின்ற
தகைமை கைசெய்தபாவம்
தவறுபவர் விளங்காத பிள்ளையைப் பெறுவதே
தாய்வயிறு செய்த பாவம்
வருந்துபவ முன்செய்த பாவவினையென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

திருந்து கற்பனை = அழகிய வருணனைச் சமத்காரங்கள். புன்கவி = இழிவான செய்யுள். சேவகம் திரிதல் = அடிமைத்தொழில் செய்து உழலுதல். பரிந்த = அன்புடைய. பருகல் = அருந்தல். பாவனை = அபிநயம். லயம் = தாளஅமைதி. சுருதி நயம் = சுருதியொத்த சங்கீதத்தின் இனிய அமைதி. பரதம் = பரதநாட்டியம். தரும் தமிழ் = (கடவுளால்) தரப்பட்ட தமிழ்ப்பாஷை. ஏற்கின்ற தகைமை = கையேற்கிற தன்மை. (17)

### இவர்க்கிவை யுளவேனு மிவைவேண்டுமெனல்

அதிவீர னென்னினுந் தந்திர வுபாயமுட
னொன்னலரை வெல்லல்வேண்டு
மாயிரம் வித்தை கற்றாலு முலகர்க்கணி
லடக்கம திருத்தல் வேண்டும்

நதிகோடி நீந்திவந்தாலு மோடந்தனை
நயந்து கரைசேரல் வேண்டும்
ஞானதத்துவ முணர்ந்தாலு முலகத்தினி
னடக்கைதனை யறிதல் வேண்டும்
ஆதிசேர் குபேரனென்றாலு மொருலாபமுறு
தொழிலுட னிருக்கல் வேண்டுந்
தூய்யவல்லமையுடைய னெனினு மொருசார்பினுற்
றவர்களைக் காணல் வேண்டும்
மதியூகி யென்னினும் பெரியர்சொற் கொளல்வேண்டு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

அடையலர் = பகைவர். உலகத்தினில் நடக்கை = உலகத்தவர் களுடைய நடத்தை. தூய்ய = சுத்தமான. சார்பு = சம்பந்தம். மதி யூகி = நுண்ணறிவால் எதையும் ஊகித்து அறியவல்லவன். (18)

## இவர்க்கிவை வேண்டாமெனல்

பெற்றதாய் தந்தை தன்சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்
பின்னொன்று முன்னொன்று பேசியே யவமான
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள்போல வுட்பகையான வஞ்சகரை
யொருநாளு நம்பல்வேண்டா
மொருவருக்கிச்சையாய்ப்பொய்சொலிப்பின் சண்டையி
லூமைபோ னிற்றல்வேண்டாம்
சற்றுமே பொறுமையில்லாதவர்கள் சண்டையிற்
றுன்போய் விலக்கல்வேண்டாந்
தைரியந்தனில் விக்ரமாதித்த னென்னினுந்
யே புகழல்வேண்டாம்

*மற்றென்று மொண்ணுது செப்பல்வேண்டாமென்பர்*
*மணவாள நாராயணன்*
*மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே*
*வரத வேங்கடாயனே.*

*உற்றவர்கள் = அன்பர்கள். உட்பகையான வஞ்சகர் = மனத்திலே பகைமைகொண்டு வெளிக்கு வேண்டியவர்போல் நயவஞ்சகரா யிருப்பவர்கள்.* (19)

## மூர்க்கர் முதலியோ ரியல்பு

*மெய்யான புத்திபல சொல்லினுந் தன்புத்தி*
*மேலாகிறேன் மூர்க்கனும்*
*மிக்கபெரியோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை*
*மேன்மை செய்வோன் மூடனும்*
*செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி*
*செய்யுமவனே துஷ்டனுந்*
*திரளான நன்றிபல செய்தவர்க்கே யிடர்கள்*
*செய்வோன் மகாபாதகன்*
*ஐயாவெனப் பணிந்தாலுமோ கோபம*
*டங்காதவன் குரூர*
*னனுதினந் தீமைபுரிவோ னெந்நாளினு*
*மடங்காத சண்டாளனும்*
*மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரின்*
*மணவாள நாராயணன்*
*மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே*
*வரத வேங்கடாயனே.*

*இடர்கள் = துன்பங்கள். மை ஆர் தட சோலை = மேகங்கள் படிந்து தங்கப்பெற்ற [உயர்ந்த] பெரிய சோலைகள். திகழ்கின்ற = விளங்குகின்ற.* (20)

### இப்படிப்பட்டவன் இவ்வங்கவீனனாவனெனல்

காதலையீயானாதி மாதலத் தாதியாத
கயவனே யினையுடையவன்
கைதந்த வோலை வாசிக்கமாட்டாத வொரு
கசடனே மிக்ககுருடன்
சீதுபெறு தன்கலை கண்டவர்க் குத்தரஞ்
செப்பிலாதவ னூமையாஞ்
செயலான தன்பதத்தை யென்றேனு மறியாத
செய்கையுடையோன் செவிடனாம்
எதெனினு மொருபோது விளங்காத மேதகம
தெடிக்குமவனே குரூபி
பென்றேனு முன்பாத தரிசனஞ் செய்யாத
வீனனே நீசனென்பார்
மாதுசத்தியபாமை தழுவுமணி மார்பனே
பணைவாள நாராயணன்
மணதிலுறை மலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடாசலனே.

கயவன், கசடன் = யாதொரு நற்குணமுமில்லாத கீழோன். உத்தரம் = விடை. செயலான = நல்லொழுக்கத்தைக் கற்பிக்குஞ் சிறப்பமைந்த. குரூபி = அவலக்ஷணவுருவமுடையோன். சத்திய பாமை = கண்ணனது மகிஷிகளில் ஒருத்தி. மணிமார்பன் = கௌஸ்துபமென்னும் இரத்தினத்தைத் தரித்த மார்பையுடையவன். இனி, மணி = அழகுமாம். (21)

### உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி

கண்டபகை யாளி முன்னின்று பொருதாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடு கள்வருக் காடையும் பணிகளுங்
காணுமலே கொடுப்பார்

சண்டமா ருதமென்ன வருகின்ற பகைவர்க
  டமக்கு மனையுங் கொடுப்பார்
சவுக்கிட் டடிக்கின்ற மன்னர்க்கு வீட்டுத்
  தனங்களெல்லாங் கொடுப்பார்
அண்டிவரு மெமதூதர் வந்துதான் கேட்குமுன்
  னங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிமிசை யிப்படி கொடுக்கின்ற பேர்கடமை
  யதிலோப ரென்பதென்னே
மண்டலமும் விண்டலமு முண்ட கனிவாயனே
  மணவாள நாராயணா
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
  வரத வேங்கடராயனே.

வஞ்சப்புகழ்ச்சி = புகழ்வதுபோன்று இகழ்வது. பொருதாமல் = போர்செய்யாமல். களம் = போர்க்களம். புறம் கொடுத்தல் = தோற்று முதுகுகாட்டி யோடுதல். பணிகள் = ஆபரணங்கள். சண்டமாருதம் = உக்கிரமான பெருங்காற்று. அங்கம் உறும் உயிர்=உடலிற்பொருந்திய உயிர். அவனி = பூமி. அதிலோபர் = மிக்க லோபகுணமுள்ளவர். கனி வாயன் = கொவ்வைப்பழம்போலச் சிவந்த வாயையுடையவன். (22)

## உலோபியர்குண மாறமை

தேன்கொண்ட துளியொன்றி லேழுகடலெலாந்
  தித்திக்கவே செய்யினுஞ்
செய்யபூமலரினால் வச்சிரந்தன்னைச்
  சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்ட மலையெலாங் கைக்கொண்ட வெண்ணெயாற்
  கனிவுற்ற மெருகுசெயினுங்
கயவர்க்கு நீதியும் பேடிக்கு வீரமுங்
  கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்

ஊன்கொண்ட மூடர்க் கிரக்கமுற தெளியுற
வுரைத்து நலமேற் றலமேய
ஊமையெனின் குருடன் முத்தமிழ்ப் பயக்கினு
முலையாதக் கீர வாதமே
வான்கொண்ட மேகம் பொழியக் கொண்ட பாகனே
மணமேவு சரப்பமான்
பனி நிறையு மலர்மேடுர்க்கை மணவாளனே
வாச வேங்கடராமனே

எழுகடல் = உவர்நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், நன்னீர் என்னும் இவற்றின் மயமானவை. செய்யபுமலரிறுதல் = அழகிய பொலிவுள்ள ஒரு பூவைக்கொண்டு. சிறக்க நன்றாக. கான் காடு. கவின் உற்ற அழகுபொருந்திய. ஊன் கொண்ட மூடர் - சதைக் கொழுப்பைக்கொண்ட மூடர்கள். நலம் = நன்மை. முத்தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன. ஈவு = கொடுக்குங் குணம். வான் கொண்ட ஆகாயத்தை இருப்பிடமாகக்கொண்ட (23)

### இக்குற்றமுடையோர்க்கு இதுசெயல்வேண்டுமெனல்

கதித்திடும் பாகவதரென்னு மபாயத்திணி
கண்டிதமி செய்யல் வேண்டும்
கல்வியறியாத சமயொழி ஞானபாசங்கங்கள்
களிராஜு செய்யல் வேண்டும்
விதித்த முப்பூஜை யென்னறுந் தவாரதர்க்கு
விக்கினை தவிக்கல் வேண்டும்
வெப்பரின மூடகரென்னு நலமேலடைந்து
மேற்புத்தி சொல்லல் வேண்டும்
அதிர்ஷ்டமிலை யென்னினும் சனியனம் பக்கதொழி
லதிலே முயற்சி வேண்டும்
மசாத்தியமாவதை கனேராகவென்னுமே
ஔஷதார தீவர்கண்டாய்

வசிஷ்டரொடு வான்மீகமுனி துதி சரித்திரனை
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனை.

கதித்திடும் பகைவர் = மிக்க பகைமையுடையவர். கவிராஜர் = சிறந்த வித்வான்கள். விதித்த = விதிப்படி அமைந்த. வெய்ய சினம் = கொடிய கோபம். மேல் புத்தி = மேலான அறிவு. சலியாமல் = இளைத்து ஓயாமல். கனரோகம் = பலமான வியாதி. (24)

### இதினும் இது மிக்கதெனல்

தினமுந் திரிந்து தனியாகியே மிக்கபொரு
ளீட்டிநனி வாழுமதிலுஞ்
செல்வரொடு தந்தைதாய் சுற்றமுங் கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாம்
தனதுபரியாசைதனொடு பெருமையறியாதபேர்
தனமாரி பொழியுமதிலுஞ்
சமமான மேன்மைதெரிகின்ற பெரியோர்தந்த
தாம்பூலமே யதிகமாம்
கனமருவு பலபல மகாவித்தை சிலசில
கருத்தொடு படிக்குமதிலுங்
கருணைபெற வொருவித்தையாயினுங் குறைவறக்
கற்கின்றதே யதிகமாம்
மனிதர்சில ரிவையன்றி யவையதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனை.

தனி ஆகியே = (துணை ஒருவருமில்லாமல்) தனிப்பட்டவனாய். நனி = மிகவும். செல்வரொடு = செல்வப்பிள்ளைகளோடு. சுற்றம்=உறவினர். தனம் மாரி = செல்வமழை. சில சில கருத்தொடு படிக்குமதிலும்=சிறிது சிறிது தன் மனப் போக்கைக்கொண்டு படிப்பதைக்

காட்டிலும். கருணை பெற = (நல்லாசிரியருடைய) அருள் அமைய (அவரிடத்து). இவை அன்றி அவை அதிகம் என்பர் = விசேஷமென்று இங்குச் சொல்லப்பட்டவற்றையன்றி வேறானவற்றை விசேஷமென்று சொல்வார்கள். (25)

**இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர் கொளவரெனல்**

சரணென் றடைந்தவர் தமக்கு வருவினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடைய செய்கைபோ லெவரையும் பார்க்கின்ற
தகைமையோன் தெய்வபுருஷன்
திரணமெனினும் பிறர்பொருட் காசை யில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீராத வினைவரினு மற்பரைப் பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருளிலாத் தன்கைதா னென்னினுங் கண்டபடி
புகலுவோன் புருஷராக்கர்
போற்றுமவர் மனதிற் குறிப்பறிந் துதவுவோன்
புருஷநாயக னென்பர்காண்
மரபெலா மிப்படி புகழ்ந்த குணசேகரன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கடாயனே.

புருஷமேரு = புருஷர்களுள் மேருமலைபோலச் சிறந்தவன். தன்னுடையசெய்கைபோல் எவரையும்பார்க்கின்ற தகைமையோன் = தனது செயலைப்போலவே யாவர் செயலையும் சமமாக நோக்குகிற நடுவுநிலைமையை [பக்ஷபாதமில்லாத தன்மையை] யுடையவன். தெய்வபுருஷன் = தெய்வத்தன்மையுள்ள மனிதன். திரணம் எனினும் = ஒருபுல்லளவாயினும் [மிகச்சிறியதாயினும்] புருஷ உத்தமன் = புருஷர்களுள் சிறந்தவன். தீராத வினை வரினும் = முடித்தற்கு அரிய காரியம் நேர்ந்தாலும், (அதை முடிக்கும் பொருட்டு) அற்பரைப்

பணியாத எனக்கூட்டுக. புருஷ சிங்கம் = புருஷர்களுள் சிங்கம்போலச்சிறந்தவன். பொருவுஇலா=ஒப்பில்லாத. கண்டபடி புகலுவோன்=(பக்ஷபாதஞ்செய்யாமல் அவர்கள் செயலைத்தன் கண்ணுற) கண்டபடி (உண்மையாக எடுத்துச்) சொல்பவன். புருஷரத்நம்=புருஷர்களுள் இரத்தினம் போலச் சிறந்தவன். போற்றுமவர் = வணங்கித் துதிப்பவர்களுடைய. புருஷநாயகம் = புருஷர்களுள் தலைமைபெற்றவன். மரபு எலாம் இப்படி புகழ்ந்த = (தான்பிறந்த) வம்சபரம்பரையோரெல்லாரும் கீழ்க்கூறியபடி (புருஷமேரு தெய்வபுருஷன் என்பவை முதலாகக்) கொண்டாடப் பெற்ற. குணசேகரன் = நற்குணங்களையே தலையணியாகக் கொள்பவனுன மணவாள நாராயணன். ( )

இச்செய்கையோர் இவ்விழிபெயர் பெறுவரெனல்

சற்றேனு மொருகல்வி யறியாத கயவனே
தாங்குமுயிர் கொண்ட மரமாந்
தன்புத்தியன்றிப் பிறர்புத்தியால் வினைசெய்
தகைமையோனே பதுமையாம்
கொற்றவர்கள் பகையாற் றுரத்துண்டு திரிகுவோன்
கூகையுறவானபக்ஷி
கோபமது தனக்கேயன்றி மற்றோரையுங்
கோபிக்குமவன் மிருகமாம்
கற்றபெரியோரை யெதிர் பணியாத மூடனே
கைகால் முளைத்த சிலையாம்
கண்டவர்க ளெல்லாம் பழிக்கின்ற கோளனே
கனதுஷ்ட ஜந்துவென்பார்
மற்றிவர்க ளெனமது கனவிலுங் காணாத
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

தகைமையோன் = தன்மையுடையவன். பதுமை = பொம்மை; இது, ப்ரதிமையென்பதன் விகாரம். கூகை = கோட்டான், ஓர்பருந்து.

கோளன் — கோளுரைப்போன்; அல்லது கொலைப்பாதகஞ் செய்பவன், தீமை செய்பவன். மற்று — அசை. இவர்கள் — கயவன் முதலியோர். (27)

### கல்விப் பொருட்சிறப்பு

தெள்ளமுதனைய கல்விப்பொருள் படைத்திடிற்
றேசமெல்லாந் துதிக்குஞ்
செயத்தம்பமானபுகழ் நிலைநிற்கு மிசையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்

வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலினால்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்குறாது

கள்ளரால் திருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவுறாது
கருணைஞானந் தழைப்பு மாகையா லுனையிதய
கமலத்தில் வைப்ப தெளிதாம்

வள்ளலென வருகின்ற மாடபூசியாதிபன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

தெள் அமுதம் அனைய = தெளிவான தேவாமிருதம் போன்ற. தேசம் = தேசத்திலுள்ளவர். செயம் தம்பம் ஆன புகழ் = ஜயத்துக்கு அடையாளமாக நாட்டப்படும் தூணுக்கு ஒப்பான கீர்த்தி. வெம்ப வரு சலனம் = எரிக்கப்பட்டுவரும் அழிவு. சோதரர் = கூடப்பிறந்தவர். இதயம் கமலம் = உள்ளத்தாமரை; இதயம் தாமரைமலர் வடிவமானதொரு மாமிசாகாரமாக உள்ளது. வள்ளல் = வரையாது கொடுக்கும் ஈகைக்குணமுள்ளவன். மாடபூசியர் அதிபன் மணவாள நாராயணன் = மாடபூசியென்ற குலத்திற் பிறந்தார்க்குத் தலைவனான மணவாள நாராயணன். (28)

### கவிதைச்சிறப்பு

உரைகொண்டு சொல்வரிசைசேர்த்து பொருளின்பவகை
யோசைபெற்றே மதுரமா
யுற்றநவரசமுடன் கற்பனை யலங்கார
முண்டாகியே கவுடமாய்
நிரைகொண்ட சீர்தளை விகற்பம் பொருந்திநன்
னீதியாய்க் கடைதழைப்பாய்
நிறைகின்ற சடைதனி லுதாரமை தாகிநிலை
நின்று பழுதென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலில் வருபழுத பாகமாய்த்
தேசாரசித்தியாகச்
செப்புமொரு கவிகொண்டு குலமேலார் வந்தடிமை
செய்யினுமது நிகராதுகாண்
வரைகொண்டு பொழியுமழை காத்தருளு மையனை
மணவாள நாராயணன்
மணத்திலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனே.

உரைகொண்டு — சிறந்த சொற் பொருள் பொருந்தி. நவரசம் = ஒன்பது சுவைகள்; அவை = வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, உவகை, அவலம், வெகுளி, நகை, சாந்தம்என்பன. கௌடம் = பொருளழுத்தமும் சொல்வன்மையுமுள்ள மிடுக்கானநடை. நிரை = வரிசை. சீர் தளை என்பன = செய்யுளுறுப்புக்கள். விகற்பம் = வேறுபாடு. திரை கொண்ட தண் கடலில் — அலைகளைக்கொண்ட குளிர்ந்த பாற் கடலில். வரை கொண்டு = (கோவர்த்தனமென்னும்) மலையைக் கொண்டு. (29)

### தந்தீவினைப்பயன்

திங்களுதயங்கண்டு மலரா திருப்பது
செழுங்கமல முற்றவினையே
தினகரனை யெதிர்கண்டு முகைகொண்டு வாடுவது
சேதாம்பல் செய்தவினையே

கொங்குலவு சண்பக சுகந்தமலர் கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழை கண்டுள மெலிந்திட வருந்துவது
கோகிலஞ் செய்தவினையே
அங்கணுல கெங்கணு மகிழ்ந்த பெரியோர்களை
யருளா திருந்துவிடினு
மவர்மீது குற்றமது சொல்வரோ சேர்ந்தவ
ரதிர்ஷ்ட மென்பார்கள் கண்டாய்
வங்கியந் தரு மிசைகனிந்த கனிவாயனை
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனே.

திங்கள் = சந்திரன். தினகரன் = சூரியன். முகை கொண்டு = குவிவையடைந்து: முகை = அரும்பாதல். சோதாம்பல் = செவ்வாம்பல். கொங்கு உலவு = வாசனைவீசுகிற. சண்பகம் வண்டுணுமலர்மா மென்பது அறிக. மருள் = பிரமை, மாறுபாடு. சுரும்பு = வண்டு. கொண்டல் = மேகம். உளம் மெலிந்திட = மனம் வாட்டமடைய. கோகிலம் = குயில். அம் கண் உலகு எங்கணும் = அழகிய இடத்தை யுடைய உலகம் முழுவதிலும். அருளாது = கருணைசெய்யாமல், கொடாமல். வங்கியம் = புள்ளாங்குழல்: மூங்கிலின் பெயர் அதனு லாகிய புள்ளாங்குழலைக் குறித்தது. இசைகனிந்த = சங்கீதம் இனிமை மிகப்பெற்ற. கனி வாயன் = கொவ்வைப்பழம்போலச் சிவந்த வாயையுடையவன். (30)

## அரசர் கவிவாணர்க்குச் செய்யு முபசாரம்

போசனஞ் சந்தமலர் மாலை தாம்பூலம்
பொருந்து வஸ்திர பூஷணம்
புரவியொடு சவிகையுஞ் சிவிகைகரி வாத்தியம்
பூமிமனை தனதானியம்

தூசுலவு துவசமெனும் வெகுமான சோடசந்
துதரால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல் வந்தருள்கெனத் தழுவுத
றுதித்திட விருக்கையுதவல்
நேசவெகுமானங்கள்செய் தெழுதல் வழிவிடுத
னிறையங்கிகார மேழாம்
நெறிகொண்ட புவிராசர் கவிராசர்பாற் செய்யு
நீதிமுறை யென்பர் கண்டாய்
வாசவன்பெறு விசய சூதனெனு நாதனை
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடாயனே.

சந்தம் = சந்தனம். புரவி = குதிரை. கவிகை = குடை. சிவிகை = பல்லக்கு. கரி = யானை. தூசு உலவு துவசம் = வஸ்திரம் அசையப்பெற்ற கொடி. சோடசம் = பதினாறு. இருக்கை உதவல் = வீற்றிருத்தற்கு உரிய ஆசனந் தருதல். நிறை அங்கிகாரம் = திரும்பிப்போதற்கு மனப்பூர்த்தியாக உடன்பட்டுத்தரும் அநுமதியைப் பெறுதல். புவி ராசர் = பூமியையாளும் அரசர். கவிராசர் = செய்யுள் செய்யவல்ல சிறந்த புலவர். வாசவன் = இந்திரன். விசயன் = அருச்சுனன். சூதன் = தேர்ப்பாகன். (31)

## புல்லர் நல்லோர்தன மறியாரெனல்

சந்தன வனந்தனிலிருந்து மதன்மணமதைச்
சற்றுமறியார் கிராதர்
தாளங் குளிக்குமவ ரதன்மாலை யணியார்கள்
சங்குமணிதன்னை யணிவார்
கந்தமலி தாமரை யடுத்து மண்டூகங்
கருஞ்சேறுதனை யருந்துங்
காமருவு தேமாவின்மிசை யிருந்தாலுமென்
காகமது வேம்புநுகரும்

அந்தவகைபோல நல்லோர்தமை யடுத்தே
யநேகநாட் பழகிவிடினு
மற்பர்தா மறிகின்ற தறிவதல்லாமன் மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடு கணந்தன்னி லவர்பெருமை யறிகின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

கிராதர் = வேடர். தரளம் = முத்து. கந்தம் மலி = வாசனைமிக்க. மண்டூகம் = தவளை. கா மருவு தேமாவின் மிசை = சோலைகளிற் பொருந்திய தேன்மாமரத்தின்மேல். நுகரும் = உண்ணும். வந்திடு கணந்தன்னில் = (பெரியோர்கள் தன்னிடத்தில்) வந்துசேர்ந்த க்ஷணத்திலேயே. அவர் பெருமை அறிகின்ற மணவாள நாராயணன் என்ற பிரபு எனக் கூட்டுக. (32)

## மேலோர்செயல் கீழோர்க்காகாமை

எத்தனை செய்தாலு முனிவோர்கள் மாதவ
மிசைந்ததாற் பெருமைபெறுவா
ரிகழ்ந்து வசைசொல்லினுங் கவிராசர் வித்தையா
லென்று மிகுமேன்மை பெறுவார்
சிந்தைமகிமா வொன்று வழுவினுந் துரைகள் செங்
திருவினாற் புகழ்சிறப்பார்
சிறியர்க ளெப்படி புரிந்தாலு மேற்குமது
சிறுமையே யார் செப்பவசமோ
தந்தியது நெறிதப்பியே நடந்தாலுமது
தன்னை மதயானை யென்பார்
தானுமப்படி தவறு செய்யிலோ பேயென்று
தள்ளிமுனிவார்கள் கண்டாய்

மந்திசெறி யிடபகிரி தன்னிலுறை வாசனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனை.

மா தவம் இசைந்ததால் = சிறந்த தவம் பொருந்தியுள்ளமையால். வசை = நிந்தை : இது, இங்கு வசைக்கவியைக் குறிக்கும். சிந்தை மதமாய் = மனத்தில் செருக்குக்கொண்டு. வழுவினும் = தவறினும். செம்திருவினால் = சிறந்த ஐசுவரியத்தினால். புகழ் சிறப்பார் = கீர்த்தி மிகுதியாகப்பெறுவர். சீரியர்கள் = பெரியோர்கள். எற்கும் = தகும். அது = பெரியோர் செய்யும் செயலை. தந்தி = யானை. நெறி தப்பி = வழிதவறி ; முறை கேடாய். மந்தி = குரங்கு, செறி = மிகுந்த, நெருங்கிய. இடபகிரி என்பது = திருமாலிருஞ்சோலைமலை யென்னும் திருமாலின் ஸ்தலத்துக்குப் பெயர். உறைவாசன் = வசிக்கின்ற [எழுந்தருளியிருக்கின்ற] இருப்பிடத்தை [ஆலயத்தை] யுடைய திருமால். (33)

### இது இல்லையாயின் இது விளங்காதெனல்

சந்திரனிலா விரவு மதுரமில்லாத கனி
தனயரில்லாத செல்வம்
சற்சனரிலாத வூர் புரவியில்லாத படை
தளபதியிலாத சேனை
பைந்தொடியிலாத மனை பாடலில்லாத வோசை
பக்தியில்லாத பூசை
பார்த்திபரிலாத பட்டணம் யூகமந்திரிகள்
பக்கத்திலாத வரசு
கந்தமில்லாத மலர் சத்தியமிலாத வாய்
கல்வியில்லாத தேகம்
கனவினய மில்லா நியோகி சுசியில்லாத
கன்ம முபதேசமில்லா

மந்த்ரமிவை விக்வசன மில்லாத சபையென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

தனயர் = பிள்ளைகள். சற்சனர் = நல்ல சனங்கள். புரவி = குதிரை. படை = சேனை. தளபதி = சேனைத்தலைவன். பைந்தொடி = பசுமை, தொடி எனப் பிரியும்; பசும் பொன்னாலாகிய தொடியென்னும் கைவளையலையுடைய மனைவி. பார்த்திபர் = பார்த்திவர் = அரசர்: பிருதிவியைஆளுபவர்; பிருதிவி = பூமி. யூகம் = ஊகித்து அறியும் ஆலோசனைத்திறம். கனம் வினயம் = சிறந்த வணக்கம். நியோகி = தத்துவஞான முடையவன்; அல்லது, மிகவும்யோகஞ் செய்பவன். சுசி = பரிசுத்தி. கன்மம் = வைதிகத்தொழில். உபதேசம் இல்லா = (குருவினிடத்தினின்று) உபதேசம் பெறாத. (34)

## பௌராணிகர் முதலியோர் சிறப்பு

ஆருக்கு மானந்தமாகவே பொருள்சொல்லு
மவனே புராணநிபுண
னங்கமொடு கிரகநிலை கணிதமுந் தெரிகுவோ
னருள்புரோகித புருஷன்

சீருற்ற சபையெலா மெச்ச ப்ரசங்கமுறை
செப்புமவனே வித்துவான்
செப்புமந்திர யந்த்ர தந்த்ரமொடு மிக்கசுப
சீலனே மந்த்ரவாதி

ஏருற்ற கல்விகுண மேன்மையொறை போதங்க
ளிசையுமவ னாசாரிய
னென்று மவர்சொற்படி நடந்து பயபக்தியோ
டிருக்குமவனே சீடனு

மாருக்கு வேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

அங்கமொடு=வேதத்தை அறிதற்கு உரிய ஆறு அங்கங்களோடு; அவையாவன = சீக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பம் என்பன ; இங்கு இவற்றால் அறியப்படும் வேதத்தையும் கூட்டிக்கொள்க. கிரகம் நிலை = சூரியன், சந்திரன் முதலிய நவக்கிரகங்களின் நிலைமை. கணிதம் = கணக்குநூல். அருள் = (தன்னைச்சார்ந்தோர்க்கு அருளுந்தன்மையுள்ள. புரோகிதன் அரசர்க்கு உரிய கூட்டத்தார் ஐவரில் ஒருவன் ; அவனுவான் = வருங்காரியஞ் சொல்வோனும் கிருத்தியம் பண்ணுவிப்போனுமாகிய பிராமணன். பூசுரன் = பிராமணன் ; பூமிக்குத் தேவன்போன்றவனென்பது இதன் பொருள். சீர் உற்ற = சிறப்புப்பொருந்திய. யந்த்ரம் = மந்திர சக்கரம். தந்திரம்=அங்கந்யாஸம் முதலிய அவயவங்களின் தொழில்கள். சுபம் சீலன் = மங்களகரமான நல்லொழுக்க முடையவன். ஏர் உற்ற = அழகுபொருந்திய. பொறை = பொறுமை. போதங்கள் = (பலவகை) ஞானங்கள் ; போதிக்கும் ஆற்றல்கள் என்றுங் கூறுவர். இசையுமவன் = பொருந்தியவன். மா ருக்கு = சிறந்த ருக்குமுதலிய வேதங்கள். அவை—ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன. வேதாந்தம் வாசன் = வேதாந்தத்தில் வசிப்பவன் ; வேதாந்தத்திற் காணப்படுபவன் என்க. நேசன் = கருணையையுடையவன். (35)

## மருத்துவனியல்பு

தீரமான சாஸ்திர முணர்ந் தொருசிகிச்சையது
செய்திட வழைத்தபின் போய்த்
தேசகாலஞ்சாதி தேகங்குணம்பிணி
சிறக்குமாறுந் தெளிந்து

[illegible]
[illegible] நாடி கலிகங் கியாழங்
கனகுளிகை பஸ்ப[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] வேங்கடபதியே.

சீரான சாஸ்திரம் (மேன்மை) நிலைபெற்ற (வைத்திய) நூல். சிகிச்சை = வைத்தியம்; (நோய் தீர்த்தற்கு உரிய) பரிகாரம். சிறக்கும் ஆறும் முக்கியமான இவ்வாறு விஷயங்களையும் கரம் ஆன நாடி = கையிற்பொருந்திய நாடி [நரம்பு.] நாடி முதல் எட்டுப் பரீக்ஷை—நாடி, ஸ்பர்சம, குரல், தோற்றம, கண், மலம், மூத்திரம, நாக்கு என்கிற எட்டையும் பரிசோதித்து நன்மைதீமையறிதல் என்பர் மருத்துவர். கலிகம் - கண்ணுக்கு இடும் மருந்து. கியாழம் கஷாயம். கனம் குளிகை - பருத்த அல்லது சிறந்த மாத்திரை. பஸ்பம = பஸ்மம். கருது - (சிறப்பாக) எண்ணப்படுகிற. பரம ஆன - சிறப்பான. உசிதமாய் = தகுதியாக. பத்தியம் - மருந்துக்கு இசைந்த புசிப்பு. பரிவு பெறும = இனிமைபெற்ற. திரள் (செல்வத்) திரளினிடத்து. ஆசை பகராத = ஆசைவார்த்தையைச் சொல்லாத. பண்டிதன் = வைத்தியன். வரம் ஆன - சிறப்புள்ள. தந்வந்திரி - தேவவைத்தியர்: விஷ்ணுவின் அம்சமானவர்; திருப்பாற்கடல் கடைந்தகாலத்து அதனினின்று தோன்றியவர். (36)

## திருவேங்கடசதகம்.

### ஆராயாதுசெய்யு மெழுவரடையுங்கதி

நீதிவழுவாவகை வழக்குரைப்போர்களு
நிறைந்த தீவினைகளெல்லாம்
நீங்குபரிகாரமுறை செய்குவோரும் பிணி
நிறுத்தவரு பண்டிதர்களும்

சோதிடஞ் சொல்லும் புரோகிதரு முலகந்
துதிக்க செங்கோல்வேந்தருந்
தூயவுபதேச தேசிகரு மவர்சீஷருஞ்
சொல்லுமிவ ரேழுபேரும்

ஆதிமறைநூலி லுரைசெய்தவித மாராய்ந்
தறிந்து தெளியாதுசெயிலோ
வடைக்கலப் பொருளைக் கவர்ந்திடும் பெரியு
பாதகரா கடைவர் கண்டாய்

மாதிர நெடுங்கடல் வளர்ந்த நெடுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

வழுவாவகை — தவறாதபடி. வழக்கு உரைப்போர்கள் — வழக்குத் தீர்ப்புச் சொல்பவர்களாகிய நியாயாதிபதிகள். தீவினைகள் = பாவங்கள். தீவினைகள் நீங்கு பரிகாரம்—செய்த பாவம் தீர்தற்குச் செய்யும் பிராயச்சித்தம். செங்கோல் — நீதி தவறாத ஆட்சி. தூய—சுத்தமான. தேசிகர் — ஆசாரியர். ஆதி — முதன்மைபெற்ற. மறை நூலில் = வேதசாஸ்திரங்களில். தெளியாது — தெளிவு கொள்ளாமல். அடைக்கலப்பொருள் — ஒருவரிடத்தில் ஒருவர் பாதுகாத்துக்கொடுக்கும்படி வைத்த பொருள். அகோரம் — கொடுமை, உக்கிரம். மாதிரம் நெடுகடல்வளர்ந்த நெடு மாயனே—திசைகளும் பூமியும்ஆகாயமும் பெரிய சமுத்திரமும் ஆகிய இடங்களிலெல்லாம் வியாபித்து ஓங்கிய விசுவரூபமுடைய திருமாலே! திரிவிக்கிரமாவதாரகாலத்திலும் மற்

றும் சிற்சில சமயங்களிலும் திருமால் விசுவரூபமெடுத்தனரென்க. மாதிரம் என்பதற்கு=திசை, பூமி, ஆகாயம், மலை முதலிய பொருள்கள் உண்டு. (37)

## குடிவாழ்க்கைச்சிறப்பு

மிக்கதெய்வத்தலமு ஞானகுரு பீடமும்
விளங்குமாகதிபு மறையோர்
மேவிய கிராமமும் பூமிநலமுந் தனமு
மேலரசுமுடைய நாட்டில்

முக்கனிதருஞ்சோலை நீர்வளங் குடிவள
முயங்குபயிர்வளமு முளதாய்
மொழிந்தநாற்குலமுஞ் செழிப்பதாய்த் தேர்வீதி
முதலாய் விளங்குமூரில்

தக்கதொரு வீதியொருபா லெனிசாலமாய்ச்
சார்ந்த சிங்காரமனையிற்
றனதானியங் கறவை முதலான செல்வந்
தழைத்தன்னதானமுதவி

மக்களு மருமக்களோடு வாழ்வதே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

குருபீடம் = குருவீற்றிருக்கை. பூமி நலம் = பூமியின் சிறப்பு, நிலவளம். மேல் அரசு = மேன்மையான இராஜாங்கம். முக்கனி= மா, பலா, வாழை இவற்றின் பழங்கள். முயங்கு=கூடிய. மொழிந்த நாற்குலம் = (நூல்களிற்) கூறப்படும் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு சாதியார். தேர் வீதி = தேர் ஓடத்தக்க பெரிய இராஜவீதி. ஒருபால் = ஒருபுறத்தில். கறவை = பால்கறக்கும் பசு. (38)

### தந்தைமுதலியோராவார் இவரெனல்

நிலமுடன் கிருகமுஞ் செல்வமுந் தந்து கட
னிலுவையொன் றில்லாமலே
நிறைகல்வி புரைசெய்து நெறியொடு வளர்க்கின்ற
நேசனே யுயர் தந்தையாம்
கலைமதிய மெனவே வளர்ந்தபின் செல்வங்கள்
கண்டு மிகமனமகிழ்ந்து
கருதரிய புத்திரன்போல மருமகளையுங்
கருணைசெய்பவ ளன்னையாம்
பலகலை புணர்ந்து மிகுசெல்வமுந் தேடிப்
பகிர்ந்து தன்போல் விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குதவியே யவர்சொன்ன
படி செய்குவோன் புத்ரனாம்
மலர்பொழி செழுஞ்சோலை மலைவளரு மாயனை
மணவாள நாராயணன்
மனதிலுறை மலர்மேவுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

நிலுவை = இறுத்து மிஞ்சின தொகை, பாக்கி. கலை மதியம் = கலைவளரப்பெற்ற சுக்கிலபக்ஷத்துச் சந்திரன். கருது அரிய = நன்கு மதிக்கத்தக்க அருமையான. கலை = சாஸ்திரங்கள். பகிர்ந்து = பங்கிட்டு. பண்பான = நற்குணம் பொருந்திய. சோலைமலை வளரும் = திருமாலிருஞ் சோலைமலை யென்னும் திவ்யஸ்தலத்தில் எழுந்தருளி யுள்ள. (39)

### நற்புதல்வனியல்பு

அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவோ
ரடைந்திடு வரந்தனைப்போ
லடுத்தவர் தமைக் காத்து மிக்கமேவலர் தமை
யடக்குமுன் சக்கரம்போல்

பெரியோ ரிருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசும் ப்ரசங்கமதுபோல்
பேருலக மெய்க்கவரு மனுநீதி முடிவேந்தர்
பெறுகின்ற மாகீர்த்திபோல்
ஒருகோடி நட்சத்திரங்களுட னடுவே
யுதிக்க சந்த்ரோதயம் போ
லுபயகுல சுத்தனும் பகிரதன் போலவே
யொருபிள்ளைபோது மவனால்
மரபெலா நன்மையே யடையுமென் பார்கள்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

மா தவம்=சிறந்த தவம். மேவலர் = பகைவர். உன் சக்கரம்= உனது சுதர்சனம் என்னும் சக்கராயுதம்; உனது என்பது, இங்குத் திருமாலைக் குறிக்கும். மெய்க்க=சத்திய மார்க்கத்தில் நடக்க. 'மெச்ச' என்ற பாடம் சிறக்கும். மனு நீதி = மனுதருமசாஸ்திரத்திற் கூறப்பட்ட நியாயம். முடி = கிரீடம். மா கீர்த்தி = சிறந்த புகழ். உபயகுல சுத்தன் = தந்தை குலம் தாய்குலம் என்னும் இரண்டினாலும் பரிசுத்தன். பகிரதன் = சூரியகுலத்தில் தோன்றிய ஓர் அரசன்; இவன், வானக்கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து, தன்மரபினோர்களை நற்கதியிற் சேர்த்தான். மரபு = வமிசம். (40)

## வேட்டகத்தியல்பு

காரிகைதனைத் தந்த மாமனார் மனைதனிற்
கருணை மருமகன் வந்திடிற்
கண்டவுட னுசார வுபசார மாகவே
கனவிருந்துகள் சமைப்பார்
சேருநாண் மூன்றாகி லபரபட்சத்திற்
செனித்த சந்த்ரோதயம்போற்
றினந்தினம் பெருமைகுறையுங் காரியங்களுஞ்
செய்யென்ப ரத்தைமுதலோர்

ஆருமெண்ணுர்கண் மைத்துனர் சரச பரிகாச
மதிகமா மனைவியெனிலோ
வன்புடன் சொன்னபடி கேளாளி காதையா
லாதியொரு கதையல்லவோ
வாருமென் றவ ரேகவசனமுஞ் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

வேட்ட அகம் = கலியாணம் செய்துகொண்ட இடம்; மாம ர் மாமியார் வீடு. காரிகை = பெண். கருணை மருமகன் = மிக்க ன்பிற்கு உரிய மாப்பிள்ளை. அபரபக்ஷம் = கிருஷ்ணபக்ஷம். சர = விளையாட்டு. ஆதியொருகதையைக் கேட்டறிக. ஏகவசனம் = ருமையெண். (41)

## மானங்கெட்டுப் பிழைப்பவ ரிவரெனல்

நேசமுறு சியமிதன தாறவினுன் மருகன்மனை
நிலையென்று வாழ்ந்தபேரும்
நேரிழைதனைத்தந்த மாமனார் மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பேசரிய கல்விதெரியா மூடர்பேரிற்
ப்ரபந்தகவி சொன்னபேரும்
பெருமைபோய்க் கள்ளக் கடன்களே பட்டுப்
பிழைத்துயிர் சுமந்தபேரும்
ஏசவரு பகையாளர்தங்கண்முன் கைகட்டி
யேவல்செய்கின்றபேரு
மீனமது பார்ப்பரோ வயிறுசா ணன்றிவர்க்
கெண்சாணும் வயிறுகண்டாய்

வாசமலர்மங்கை குடிகொண்டிலவர் கனமுறின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

சிறுமி = பெண். மருகன் = மருமகன். நேர் இழை = நேர்மையாகிய ஆபரணங்களையணிந்த பெண். பேசு அரிய = (இவ்வளவு சிறப்புடையதென்று) சொல்லுதற்கு அரிய: சொல்லமுடியாத அளவிறந்த சிறப்புடைய. ஏச = பழிக்க. ஏவல் = ஏவியதொழில். ஈனம் = இழிவு. வாசம் மலர் மங்கை = பரிமளமுடைய தாமரை மலரில் வாழும் இலக்குமி; என்றது இங்குச் செல்வத்தைக் குறிக்கும். (42)

## தீப்பெண்டிரியல்பு

பெருக் கமுதுபடை யென்றுவந்தாய்நீயு
மாண்பிள்ளை யென்றெண்ணவோ
வரிசியெங்கே பானை சட்டியெங்கேயென்ப
ளவள்சொன்ன வகையெல்லாம்
பையவே கொண்டுவந்தாலுஞ் சமைக்கப்
படாது தலைநோகுதென்று
பாயிற் கிடப்பள் சினமாயொன்று பேசினால்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல்லேனென்பள் சற்றடித்தா னஞ்சு
தின்கிறேன் கூகூவெனத்
தெருவீடுதோறு முறையிடுபெண்டி ருண்டெனிற்
றியமன் வேறுமுண்டோ
வையகம்புகழ் சோலைமலை யலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

அமுது படை = அன்னமிடு. பையவே = மெள்ள. நோகுது = நோகிறது என்பதன் மரூஉமொழி. புத்தி செய்ய வல்லேன் =

புத்திவாத்தக்க தண்டனை செய்யத் திறமையுடையேன். நஞ்சு = விஷம். பெண்டிர் = மனையாள். நமன் = யமன். வையகம் = நிலவுலகத்திலுள்ளவர். அலங்காரன் = அழகன் : இவை. திருமாலிருஞ்சோலைமலைத் திருமாலுக்கு உரிய திருநாமங்கள். (43)

### சரீரநிலையாமை

ஆகாய மீதினி லெறிந்தசிலை காற்றினை
யடைத்துவைத் திடு துருத்தி
யனலிட்ட மெழுகு வெயிலிடையிட்ட வெண்ணெய்சுழி
யாற்றிடை யெழுந்த குமிழி
மோகா விகாரமொடு வருகின்ற மின்னல்விழி
மூடி துயில்கண்ட கனவு
மோதிவரு காற்றினிற் றீவிழுந்திடு பஞ்சு
மூச்சோடுகின்ற பதுமை
மீகாம னில்லாத கப்பல் கன்னிமைபோல்
விளங்குவரு தேகமிதனை
மெய்யென்று மெய்யெலாம் பொய்யென்று திரிகின்ற
விழலெனை யாளநினைவாய்
மாகாள முகிலனைய மெய்யனை தூய்யனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

சிலை = கல். குமிழி = நீரில் தோன்றும் கொப்புளவடிவு. மோகா விகாரம் = மோகவிகாரம்—மயக்கத்தினலாகிய மாறுபாடு. மூச்சு ஓடுகின்ற பதுமை=யந்திர சக்தியினல் மூச்சுவிடும் ப்ரதிமை. மீகாமன் = கப்பலோட்டி, மாலுமி. நிலையின்மையால் பொய்யாகிய உடல் மெய் என்று வழங்கப்படுவது, மங்கலவழக்கு. விழலன் = வீணன். மா காளம் முகில் = சிறந்த பெரிய கரிய மேகம்: நீர் கொண்ட நீலமேகம். அனைய = போன்ற. மெய்யன் = திருமேனியையுடையவன். தூய்யன் = பரிசுத்தன். (44)

### நல்வினைசெய்வோர்பேறு

ஓதுமா தாபிதா குருதெய்வ விசுவாச
முடனதிதிபூசை செய்வோ
ருற்றபரதார சோதரமாகுவோ ரகித
மொருவர்க்கு மெண்ணிலாதோர்
பூததய வுள்ளோர் சகாயமே புரிகுவோர்
பொய்யிலா வாய்மையுடையோர்
பூர்வமாந் தருமபரிபாலனம் பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தனவனம்
பாதையிடை மண்டபங் கூபந் தடாகநீர்ப்
பந்தர்முதலாய்ப் புரிகுவோர்
பண்பாமிவர்க்கு மேலோகல்வந்த வினையெலாம்
பனிபோல நீங்கி நலமாய்
மாதவ முகுந்த வன்பாதமே பெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

ஓதும் மாதா = (மேலாகச்) சொல்லப்படுகிற தாய். அதிதி = விருந்தினன். உற்ற பரதார சோதரம் ஆகுவோர் = பொருந்திய அயலாருடைய மனைவியர்க்கு உடன் பிறந்தவர்போ லிருப்பவர்; பிறருடைய மனைவிமார்களிடத்து உடன்பிறந்தமுறை கொண்டாடுகிறவர்; என்றது அவர்களிடத்துச் சிறிதும் காதல் கொள்ளாதவரென்றவாறு. அகிதம் = தீமை. பூததயவு = பிராணிகளிடத்து வைக்கும் அருள். வாய்மை = சத்தியம். பூர்வமாம் = தொன்று தொட்டுவருகிற; முன் இருந்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட. தருமபரிபாலனம் = தருமத்தை நடப்பித்துப் பாதுகாத்தல். நந்தனவனம் = களிப்பைத்தரும் உத்யானவனம். பாதையிடை = பாதைக்கு அருகில். கூபம் = கிணறு. தடாகம் = குளம். புரிகுவோர் = செய்வோர். பண்பு ஆம் = நற்குணம் பொருந்திய. நலமாய் = இன்பமாக. மாதவன், முகுந்தன் = என்பவை திருமாலின் திருநாமங்கள். (45)

## உயர்ந்த பொருளிருக்குமிடத்து இழிந்த பொருளு மிருக்குமெனல்

கோகனகமலர் மலர்ந் துறுகின்ற வாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந் தொனிசெயுந் தேமா வனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷி யுறையும்

ஏகமென வுலகம் புரந்த மன்னவர் சபையி
லீனமன்னரு மேவுவா
ரிலகுமாணிக்கங்கள் விற்கின்ற கடைவீதி
யிற் பாஸிமணியும் விற்பார்

பாகனைய மதுரரச லளித ப்ரபந்தகவி
பாடுமன்னவர்கள் சபையில்
பழங்காடிகளிலும் புளித்த புன்கவிசொலும்
பாவலரு முண்டுகண்டாய்

மாகனக முறையுமொரு மணிபணியு மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

கோகனகம் மலர் = தாமரைப்பூ. உறுகின்ற = பொருந்துகின்ற. வாவி = குளம். கொட்டி = ஓர் கிழங்குப்பூண்டு. கோகிலம் = குயில். தேமாவனம் = தேன்மாமரங்கள் உள்ள தோட்டம். கூறுவாய்ப் பக்ஷி = கடுமையாகக்கூவும் ஒலியையுடைய காகம் முதலிய பறவைகள் ஏகம் என உலகம் புரந்த மன்னவர் = ஒப்பற்றவரென்று எல்லோருங் கொண்டாட உலகத்தைப் பாதுகாத்திடும் அரசர். மேவுவார் = பொருந்தியிருப்பார் இலகு = விளங்குகிற. பாகு அனைய = வெல்லப்பாகு போன்ற. ரசம் = சுவை. லளிதம் = தெளிவு, அழகு. கவிபாடு மன்னவர்கள் = செய்யுள் இயற்றவல்ல சிறப்புடைய புலவர்; கவிராயர். புன்கவி = இழிவான செய்யுள். பாவலர் = கவிஞர். மாகனகம் உறையும் ஒருமணி = சிறந்த பொற்றாமரைமலரில் வசிக்

கும் இரத்தினம் போன்ற இலக்குமி: கனகம் என்னும் பொன்னின் பெயர், இங்கு, அதனுலாகிய தாமரை மலரை யுணர்த்திற்று; அன்றி, பொன்னில் அதற்கு உரிய தெய்வமாய் வசிக்கின்ற இலக்குமி யென்னலுமாம். (46)

## சேர்ந்தவினத்தின் குணம்பெறுவோர் பெறுதோ ரிவரெனல்

சோதிநவரத்ந மணிமாலையிடை நாலுந்
துலங்குமணியாய் விளங்குஞ்
சுவைப்பழங்களுடன் சேர்ந்த செம்பொன்னுங்
கரும்புபோலே மிகக்கும்
வீதிபெறு குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மழுங்கா தொளிவிடும்
மிகவுஞ் செழுந்தேன் சொரிந்தே வளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறா
காதலாற் சேர்ந்திடு மினங்களைப் போலவே
யவனியி லிருப்பர் சிலரே
யார்சொல்லினுந் தங்கள் சுயகுணம் விடாமலே
யமைவுற்று வாழ்வர் சிலரே
மாதரையொடுங் குலவு நேயனை மாயனை
மணிவண்ண நாராயணனை
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனை
வரத வேங்கடராயனை.

சோதி = ஒளி. நவரத்நம் = ஒன்பது இரத்தினம். அவை = கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. துலங்கும் அணியாய் = விளங்குகிற ஆபரணமாய். உள்ளி=வெண்காயம், வெள்ளைப்பூண்டு. அவனி=பூமி அமைவுற்று=பொருந்தி. மா தரையொடும் குலவு நேயன் = இலக்கும் தேவியோடும் பூமி தேவியோடும் கூடிக் குலாவும் அன்புடையவன். மாயன் = ஆச்சரியகரமான குணஞ் செயல்களையுடைய திருமால். (47)

## வல்லோர்க்கும் புல்லோரால் தாழ்வு வருமெனல்

பரராசர் வச்ரமகுடந் தகர்த்திடு கத்தி
பஞ்சுமெத்தைக்கு நாணும்
பணிராசர் மணிமுடிகள் சிதற நடமிடு தோகை
பச்சோந்தியா லடங்கும்

கரராச மார்த்தாண்ட சந்த்ரகிரணங்களொரு
கட்செவியினான் மறைபடுங்
கனதைபுரி விகடதட மத்தமாதங்கமொரு
கனல்சிறிது கண்டு பயமாம்

சுரராச கங்காப்ரவாகநிக ரூற்றுமொரு
துய்யசிலையான் மறிபடுஞ்
சொல்கின்ற பெரியோர்க ளென்றாலு மற்பராற்
றாழ்விகொடு முறிவர்கண்டாய்

வரராச தசரத மகாராச புத்ரனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

பரராசர் = பகையரசர். வஜ்ரமகுடம் = வைரம்முதலிய இரத்தினங்கள் பதித்த கிரீடம்; வஜ்ரம் = உறுதியுமாம். தகர்த்திடு = உடைக்கிற. பணிராசர் = சிறந்த நாகங்கள். மணி முடிகள் = இரத்தினமுடைய சிரசுகள். நடம் இடு=நர்த்தனஞ் செய்கிற. தோகை=தோகையையுடைய மயில். பச்சோந்தி = பச்சோணான். கரராச மார்த்தாண்டன் = கிரணங்கட்கெல்லாந் தலைவனான சூரியன். கட்செவி = பாம்பு; இது இங்கு இராகு கேதுவைக் குறிக்கும். சந்திரசூரியரை இராகுகேதுக்கள் அவ்வப்பொழுது பிடித்துப் பீடிக்கிறார்களென்பது, புராணவரலாறு: அப்படி பிடிப்பது க்ரஹணமெனப்படும். கனதை புரி = இறுமாப்போடு யுத்தம் முதலிய அரியபெரிய காரியங்களைச் செய்கிற. விகட தடமத்த மாதங்கம் = களிமயக்கங்கொண்ட பெரிய மதயானை. சுரராச கங்கா ப்ரவாகம் = சிறந்த தேவகங்கையின் வெள்

ளம். நிகர் = ஒப்பு. தூய்ய சிலை = பரிசுத்தமான கல். மறிபடும் = தடைப்படும். சொல்கின்ற = (சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற. முறிவர் = கெடுவர். வராசன் = சிறந்த அரசன். (48)

பரம பாகவதராவா ரிவரெனல்

சுகனொடு வியாசன் பராசான் சவுனகன்
தூய்ய நாரதன் வசிட்டன்
துங்க வான்மீகி மாவலி றுக்குமாங்கதன்
சுக்கிரீவன் மாருதி

தருமிட்சுவாகு வீடுமனுடன் பிரகலா
தன் குசேலன் விஜயனே
தருமனொடு முசுகுந்த னக்குரூரன் பணி
ஜடாயுவுட னம்பரீஷன்

அகலி திரிசடைமாது பாஞ்சாலி சபரிமு
னழைத்திடக் கஜராஜனே
யதிராமாநுஜன் திருவரங்கத்தமுத
ராழ்வார்கள் பன்னிருவரும்

மகிமைபெறு முன்றொண்டர் பாதமே துணைகொள்ளு
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

துங்கம் = உயர்வு. மாவலி = மஹாபலிசக்கரவர்த்தி. தரும் = குணங்களாற் சிறப்புப்பெற்ற. விஜயன் = அருச்சுனன். பணி = வணங்கத்தக்க. அகலி = அஹல்யை. முன் அழைத்திடு அ கஜராஜன் = முற்காலத்தில் முதலைவாயில் அகப்பட்டுக் கடவுளைக் கூப்பிட்ட அப்படிப் பட்ட [பிரசித்தமான] சிறப்புடைய கஜேந்திரன். ஆதி = முதன்மை. ஆழ்வார்கள் பன்னிருவர் = பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்பவர்கள். (49)

### அடியார்க்கு வருஞ் சிறப்பு

உனதுபாதம் போற்று மடியார்கள் சிந்தையி
　　லுவந்துநீ யென்றுமுறவா
லுன்னுடைய திருமாத ரெண்மருஞ் சேர்வாலு
　　றுற்றதா னிதிகள் சேரும்
கனநிதிகள் சேர்ந்திடத் தனதன்வரு வானுடன்
　　கருணைபுரி நேயன் வருவான்
காதல னிடக்குதா னுமைவருவ ளன்னையாற்
　　கந்தன் வருவன் மருகனால்
தனதுமாமன் வருவ னரசன்வரவா லமரா
　　சகலருங் கண்டு வருவார்
தருமஞ் செழிக்கு மருள்சேரு மதுவன்றியே
　　தவமொன்று செயல்வேண்டுமோ
வன சரோருகமலர் மடந்தை வளர் களமுறின்
　　மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கை மணவாளனே
　　வரத வேங்கடராயனே.

திருமாதர் எண்மர் = எண்வகை இலக்குமிகள்: அவர்கள் = இராச்சியலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, சௌரியலக்ஷ்மி, தனலக்ஷ்மி, தானியலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வித்தியாலக்ஷ்மி. அவர் உற்றதால் = அவர் வந்து சேர்ந்ததனால். தனதன் = குபோன். கருணைபுரி நேயன் = அருள்புரியும் இயல்புடையவனும், அந்தக்குபோனுடைய அன்பிற்குரிய தோழனுமாகிய சிவபிரான். காதலன் = கணவன். உமை = பார்வதி. அன்னையால் = தாயாகிய பார்வதி வந்ததனால். கந்தன்=சுப்பிரமணியன். அவனது மாமன் = இந்திரன். அரசன்=தேவராசனை இந்திரன். வனம்=நீரில்தோன்றிய, சரோருகம். மலர்=தாமரைமலரில் வாழ்கின்ற, மடந்தை=பெண் : இலக்குமி ; இது, இங்குச் செல்வத்தைக் குறிக்கும். (50)

# வாழ்த்து

**ப**ரிதி யத்தம் படுத லில்லாத ராஜாங்க
பாலனஞ் செய்தருள்பவன்
பற்பல வளங்களு மலிந்தபே ரிந்தியா
பண்பிற் புரந்தருள்பவன்

அருமையுறு குணமிக்க விக்டோரியாராணி
யம்புதல்வர் பெற்ற சுகுணன்
ஐந்தாவன் **ஜ்யார்ஜ**ென்னு நாமம் புனைந்தமன்
அருளுருவமான பெரியோன்

பெருமைபெறு **மேரி**யெனு நலமிக்க வாழ்க்கைப்
பெருந்துணைவிதன்னொ டொன்றிப்
பீடுபல பெற்றுநனி குடிகளைச் செம்மையிற்
பேணிச் சிறந்து வாழ்க

தருமங்களுந் தழைந்தோங்குக மறாது வான்
தருமாரி பெய்க மாந்தர்
தரித்திரம் பிணியின்றி வாழ்க வான் பாலினைத்
தந்துமிக வாழ்வுறுகவே.

பரிதி அத்தம்படுதல் = சூரியன் அஸ்தமித்தல். பாலனம்=பாதுகாத்தல். மலிந்த = நிரம்பிய. பண்பின் = முறைமையாக. புரந்தருள்பவன் = பாதுகாத்தருள்பவன். சுகுணன் = நற்குணமுடையவன். நாமம் = பெயர். புனைந்த = தரித்த. மன் = அரசன். நலம் = நற்குணம். வாழ்க்கைப்பெருந்துணைவி = மனைவி. ஒன்றி=பொருந்தி, கூடி. பீடு = பெருமை, சிறப்பு. நனி = மிகவும். பேணி = பாதுகாத்து. தழைந்து = செழித்து. ஓங்குக = உயர்க, வளர்க. மறாது= மறுக்காமல். வான்=மேகம். தருமாரி=தக்க மழை. மாந்தர்=மனிதர். பிணி = வியாதி. ஆன் = பசு. வாழ்வு உறுக = வாழ்வையடைக.

## A few opinions—(Cont.)

"Although the stories of Prahlada and Markandeya are as old as our literature, in your books they are presented in eligant and chaste Tamil. Your books are also calculated to be of use to students of Tamil composition who ought to know how to write successfully narrative and descriptive pieces. I have recommended your Vyasakkovai (Model essays in Tamil) to my students."—S. ANAVARATAVINAYAKAM PILLAI ESQR., M.A., CHRISTIAN COLLEGL, MADRAS.

---

"Markandeya Charitham is as good as your Prahlada."—T. CHELVAKESAVARAYA MUDALIAR ESQR., M.A., PACHAIAPPA'S COLLEGE. MADRAS

---

"தேவரீர் அனுப்பிய ஸ்ரீபிரகலாதாழ்வான சரிதையைப் படித்துப் பார்த்ததில் தேவரீரது தமிழ்க்கல்வியின் முதிர்ச்சியைத்தெரிந்து மகிழ்ந்தேன். * * * * * தமிழில் நல்லநடையில் (அமைந்த சிறந்தநூல்) * * * * * தேவரீரது பிரகலாதசரித்திரத்தை என் மாணாக்கர்களுக்கேயன்றி என்குழந்தைகட்கும் கொடுத்துப் படிக்கச் செய்கிறேன்."—ஸ்ரீ. உ. வே. கா. ஸ்ரீ கோபாலாசாரியர் தமிழ்ப் பிரதம பண்டிதர், கிறிஸ்டியன் காலேஜ். சென்னை

---

## மணபதையாற்றுப்படை

"இப்பெயர்கொண்டதொரு சிறுநூல், வேலூர் வூர்ஹீஸ காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால் இயற்றப்பட்டது. இது, "பள்ளிகொண்டையென்னும் உத்தரஸ்ரீரங்கஸ்தலத்துத் திருமாலை வணங்கி யுய்ந்தானொருவன் அங்ஙனம் வணங்கி உய்வுபெறாத மக்கட்பரப்பை, அப்பெருமானிடத்தே ஆற்றுப்படுத்தலைக்" கூறுவது. இந்நூலின் சொன்னோக்குப் பொருணோக்குகளின் நன்மை தெளிவிக்கவேண்டும், இதன் ஆசிரியர் ஒரு சிறந்த பக்திமானென்பதும் இந்நூலால் விளங்குகிறது."—பத்திராசிரியர், [illegible].